பல்கலைக்கழக மானியக்குழு நிதிநல்கையுடன்

தேசியக் கருத்தரங்கம்

# இலக்கியத்தில் இறைக் கொள்கை

## ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு

15.02.2018



முதுகலைத் தமிழ்த்துறை

**ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் தன்னாட்சிக் கல்லூரி**

தேசியத் தர மதிப்பீட்டின் அடிப்படையில் 'முதல்' தர நிர்ணயம் பெற்றது

கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் இணைவு பெற்றது

DST FIST Supported College since 2015

பெரியகுளம் - 625601. தேனி மாவட்டம்.

Scanned by CamScanner

45. வேதநாயகம் பிள்ளையின் நீதிநூலில் இறைக்கொள்கை
முனைவர் அ.ஜான்சி மேரி 221
46. பாரதியார் கவிதைகளில் இறைக்கொள்கை
ஞா. அந்தோணி நிக்சன் 227
47. இறையன்பு இனங்காட்டும் இறைக்கொள்கைகள்
முனைவர் ஜெ.அருள் இருதய ஜெயந்தி 232
48. 'நிலவொன்று கண்டேன்' புதினத்தில் சமய நம்பிக்கைகள்
பொ.சாரதா 237
49. நாட்டுப்புற மக்களின் இறைக் கொள்கை
திருமதி. சே.மகரஜோதி அய்யப்பன் 242
50. இலக்கியங்களில் இறைக் கொள்கை
முனைவர் செ. ரெஜினா 247
51. இறைக்கொள்கையில் கடவுள் ஒப்பனை
வி.பிரியதர்ஷினி 252
52. செம்மொழி இலக்கியத்தில் இசுலாமிய இறைக் கொள்கை
பா. ரம்ஜான் 256



Scanned by CamScanner

# 50. இலக்கியங்களில் இறைக் கொள்கை

முனைவர் செ. ரெஜினா
தமிழ்த் துறை உதவிப் பேராசிரியை,
ஜெ.அ.மகளிர் கல்லூரி, பெரியகுளம்.

**முன்னுரை:-**

இறைக்கொள்கை என்பது பக்தி. இப்பக்தியானது இறைவனிடத்தும் இறையடியார்களிடத்தும் கொள்ளும் அன்பு. இது மனிதன் இறைவனோடு கலந்து நிற்றலைக் குறிக்கிறது. இறைக்கொள்கை என்பது இறைவனைப் பற்றி ஒவ்வொரு சமயமும் வைத்திருக்கும் மதிப்பாகும். இறைவனின் பெயர், வழிபடும் முறைகள், இறைவனைத் தொழுவதால் உண்டாகும் பயன்கள், இறைவனுடன் வாழ்க்கையை இணைத்துக் கொள்ளும் முறை ஆகியவற்றைப் பாடல்களில் காண்கிறோம். இவையே இலக்கியங்களில் காணப்படும் கொள்கையாகும். நல்வினை, தீவினை சொர்க்கம், நரகம், வீடுபேறு முதலியன பற்றியும் சமய இலக்கியங்கள் இயம்புகின்றன. இவற்றையும் பக்தி இலக்கியக் கொள்கைகள் என்றே கூறவேண்டும்.

**பக்தி இலக்கியப் பார்வை:-**

கி.பி. ஆறு, ஏழாம் நூற்றாண்டுகளில் தமிழில் பக்தி இலக்கியங்கள் எனத் தனித்த பெயர்களில் பாடல்கள் தோன்றின. தேவாரக் காலந்தொட்டு இன்றுவரை தோன்றிய கடவுட் கொள்கை இலக்கியங்களைக் கணக்கிட்டால் இதனைப் புரிந்து கொள்ள முடியும். இவற்றைத் தேவாரம், திருவாசகம், திவ்வியபிரபந்தம், திருவிளையாடற்புராணம், கந்தபுராணம், தாயுமானவர் பாடல்கள், அருணகிரியார் பாடல்கள், பிள்ளைத்தமிழ், கலம்பகம் முதலியனவும், சங்க இலக்கியத்தில் திருமுருகாற்றுப்படை, பரிபாடல் போன்றவையும் இதில் அடங்கும். தலபுராணங்கள், பிற்காலத்தில் பாரதியாரின் சில பாடல்கள், கண்ணன் பாட்டையும் கூறலாம். கம்பராமாயணமும், பெரியபுராணமும் பக்தி இலக்கிய வரலாற்றில் அடங்குவன. இந்த அடிப்படையில் பக்தி இலக்கிய வரலாறு 20ஆம் நூற்றாண்டு வரை தொடர்ந்து வந்திருப்பதைக் காணமுடிகிறது.



Scanned by CamScanner

சங்க காலத்தில் பக்தி இலக்கியம் என்று தனியாகத் தோன்றவில்லை. சிறிய அளவில் நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப்படையும் பரிபாடலையும் குறிப்பிடலாம். அகம், புறம் பற்றிய பாடல்களில் சிற்சில இடங்களில் இறைவனைப் பற்றிய செய்திகள் வந்துள்ளன. குறிப்பாக முருகன், திருமால், இந்திரன், வருணன் போன்ற தெய்வங்களும், தலைமைக் கடவுளராக சிவபெருமான், உமையம்மை போன்றவர்களும் புகழப்பட்டுள்ளனர். கடவுள் பற்றிய உறவு சங்க இலக்கியங்களில் சொல்லப்பட்டிருப்பதால் பாரதம் பாடிய பெருந்தேவனார் சங்க இலக்கியங்கள் அனைத்திற்கும் கடவுள் வாழ்த்துப் பாடியுள்ளார். வெறியாட்டு முதலிய வழிபாட்டு முறைகள் தமிழர்களிடத்தில் இருந்ததைத் தொல்காப்பியம்,

"வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்
வெறியாட். டயர்ந்த காந்தளும்" (தொல். எழுத்து. நூ. 60)

எனக் கூறுகிறது.

சமண, பௌத்தக் கொள்கைகள், நிலையாமை பற்றிய சிந்தனைகளைக் காஞ்சித்திணையில் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது. சென்ற பிறவி, இப்பிறவி என்னும் கருத்துக்களை அகத்திணை – களவியலில் காணமுடிகிறது.

"ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
ஒன்றி உயாந்த பாலதாணையின்
ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோ னாயினும் கடிவரை யின்றே" (தொல்.நூ.84)

என்று கூறுவதிலிருந்து பிறவிகளை ஒத்துக்கொள்ளும் தொல்காப்பியரது சமயக் கொள்கையை உணரமுடிகிறது. தொல்காப்பியர் அக்காலச் சமூகத்தில் வழங்கிய சமயக் கொள்கையையே பக்திக் கொள்கையாகக் கொண்டிருந்தார்.

**சங்க இலக்கியப் பார்வை:-**

எட்டுத்தொகை நூல்கள் அகம், புறம் பற்றிய செய்திகளைத் தனித்தனியே கூறுகின்றன. இந்நூலில் காணப்பெறும் சமய நெறிகள் குறித்து கு.வெ. பாலசுப்பிரமணியன் அவர்கள், "அகம் புறம் என்ற பாகுபாடும் அடி அளவில் வேறுபாடும் கொண்ட எட்டுத்தொகை நூல்கள் சமயச் சார்பில் இந்நூல்களில் பெரிய வேறுபாடு இல்லை. சங்க காலத் தொடக்கத்தில் பாடப்பட்ட பாடலாயின் அதில் தமிழக வழிபாட்டு நெறி புலப்படும். சங்க காலப் பிற்பகுதிக்குரிய பாடலாயின் சமண, பௌத்த,



Scanned by CamScanner

வைதீக, ஆசீவக நெறிகளின் கோட்பாடுகள் காணப்பெறும். சங்கப் பனுவல்களை வரிசையுறுத்த அவ்வலகும் பயன்படும்" சங்க இலக்கியத்தில் சமுதாயக் அமைப்புகள் (ப.188) என்னும் நூலில் கூறுகின்றார். இந்தக் கருத்தின் அடிப்படையில் எட்டுத்தொகை நூல்களை ஆராயும்போது சங்ககாலச் சமுதாயத்தின் இறைக் கொள்கையின் வளர்ச்சி நிலை புலனாகிறது.

இறைவனை இயற்கையோடு இணைத்துப் பாடுவது அக்காலக் கொள்கையாக இருந்தது. சங்க இலக்கியங்களில் காணப்பெறும் இறைச்செய்திகள் இதை உணர்த்துகிறது. பத்துப்பாட்டுள் ஒன்றான திருமுருகாற்றுப்படை முருக வழிபாட்டை வெளிப்படையாகக் கூறுகிறது. பெரும்பாணாற்றுப்படை பத்துக்கும் மேற்பட்ட இடங்களில் இறைவனைப் பற்றிக் கூறுகின்றது. அவற்றைச் சமயக் கருத்துக்களாகவும், பக்திக் கொள்கையாகவும் கொள்வதற்கு இடமுண்டு. பட்டினப்பாலையில் மகளிர் நெய்தல் நிலத்தில் வாள்சுறா மீனை, உணவுக்காக வேட்டையாடிய பரதவர்கள், இருபுறமும் இரம்பம் போன்ற அதன் மருப்பை வெட்டி எடுத்து, கடற்கரை மணலில் செங்குத்தாக நட்டுவைத்து அதனில் அணங்கை வரவழைத்து முழுநிலா நாளில் பரதவர்கள் அனைவரும் கூடி வழிபாடு செய்வது என்பது, சுற்றுச் சூழற் கூறுகளோடு அவர்களுடைய சமய நடைமுறைகள் ஒருங்கிணைந்து இருப்பதை (86 - 87) வெளிப்படுத்துகிறது.

**காப்பியப் பார்வை:-**

தமிழ்க் காப்பியங்கள் யாவும் சமயக் காப்பியங்களாகவே உள்ளன. பெரும்பகுதி சமண சமயச் சார்புடையவை. மணிமேகலை புத்தமதக் கருத்தைக் கொண்டது. மணிமேகலையும் மாதவியும் துறவு பூண்டு பௌத்தக் கொள்கையைப் பின்பற்றினர். தெய்வம் தோன்றி மக்களிடம் பேசுகிறது என்பதை மணிமேகலா தெய்வம் மணிமேகலை முன் தோன்றி அவளின் பழம்பிறப்பை உணர்த்துவதன் மூலம் காணமுடிகிறது. சைவக் காப்பியமான பெரியபுராணத்தில் அறுபத்து மூன்று நாயன்மார்களும் அற்புத நிகழ்ச்சிகளை நடத்துகின்றனர். சில கதைகள் பக்தி நெறிக்கு அப்பாற்பட்டு அச்சம் கலந்த தன்மையிலும் காணப்படுகின்றன.

**பக்தி இயக்கப் பார்வை:-**

பக்தி இலக்கியங்களில் முதற்கண் நிற்பவை ஆழ்வார்களின் பாடல்களும், நாயன்மார்களின் பாடல்களுமே ஆகும். தமிழ்ச் சமூக 'மறுமலர்ச்சிக் காலம்' என்பது இவர்களின் காலமாகும். தமிழகத்தில்



Scanned by CamScanner

மக்களிடையே பக்தி இயக்கத்தை உருவாக்கியவர்கள். ஆனால் இவர்களிடையே போட்டி நிலவி இயக்கங்களாக மாறின. இறைவனையே வைத்துப் பாடிய சைவர்களுக்கு எதிராக ஆழ்வார்கள் இறைவனைக் குழந்தை, தாய், காதலன், காதலி, சேவகன் முதலிய சமூக உறவுகளாகப் பாடினார்கள். ஆதலால் பக்தி இலக்கியங்களின் தோற்றம் பக்தி இயக்கத்திலிருந்தே உருவானது எனலாம். அறுபத்து மூன்று நாயன்மார்களும் பன்னிரு ஆழ்வார்களும் பக்தி இயக்கத்தை உருவாக்கி அவரவர் வெற்றியும் கண்டனர் என்றே குறிப்பிட வேண்டும். ஆழ்வார்கள் ப்ன்னிருவரும் பாடிய பாடல்கள் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்திலும், நாயன்மார்களும் பிற சைவப் புலவர்களும் பாடியவை பன்னிரு திருமுறைகளிலும் அடங்குவனவாகும்.

**கொள்கைப் பிடிப்பில் திளைத்தவர்கள்:-**

முதல் ஏழு திருமுறைகள் தேவாரம் என அழைக்கப்பெறும். இறைவனை வணங்கினால் வினைப்பயனை வெல்ல முடியும் என்கிறார் திருஞானசம்பந்தர். சிவபெருமானை உமையம்மையுடன் இருப்பதை தம் பாடலில் காட்சியாக்குகின்றார்.

“மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்
எண்ணில் நல்லகத்திற்கு யாதுமோர் குறையுமில்லை
கண்ணின் நல்ல.்.து உறூஉம் கழுமல வளநகர்
பெண்ணின் நல்லாளொடு பெருந்தகை இருந்த தென்னே”

(ஞானசம்பந்தர் தேவாரம், திருபிரம்மப்புறம், 3ஆம் திருமுறை) என்பது திருஞானசம்பந்தர் கூற்று. இறைவனை வணங்கினால் நல்லபடி வாழலாம் என்பது இவர் கருத்தாகும்.

இறைவனைப் போற்றி வணங்கும் யாவரையும் நாமும் வணங்க வேண்டும் என்பதும், தீயவர்களாக இருந்தாலும் இறைவன் மன்னிப்பான் என்பதும், எவ்வளவு தாழ்ந்தவராயினும் ஏற்றுக் கொள்வான் என்பதும் நாவுக்கரசரின் பக்திக் கொள்கையாகும்.

“சங்கநிதி பதுமநிதி இரண்டும் தந்து
.......................................................
அங்க மெலாம் குறைந்தழுகித் தொழுநோயரா்ய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர்கண்டீர் நாம்வணங்கும் கடவுளாரே”



Scanned by CamScanner

(திருநாவுக்கரசர் தேவாரம் பா. 938) எனப்பாடுவதிலிருந்து அவருடைய பக்திக் கொள்கை சமூகச் சமத்துவத்திற்கும் வழிகோலுவதை உணரலாம். ஆவுரித்துத் தின்றுழலும் புலையர்' என்பது அவருடைய கூற்றன்று. அது சமூகக் கூற்றாக உள்ளது. சுந்தரர் இறைவனுக்காகத் திருமணத்தையே விலக்கி இறைவன்பால் அடைக்கலமானவர். இவரது 'பித்தா பிறைசூடி' எனத் தொடங்கும் தேவாரப் பாடல் இறைவனுக்கும் இவருக்குமுள்ள அன்பு நெருக்கத்தைக் காட்டுகிறது. மாணிக்கவாசகரின் திருவாசகத்தை மேலைநாட்டவரும் வியந்த போற்றிய வரலாறு யாவரும் அறிந்ததே. ஜி.யு.போப் திருவாசகத்தை மொழிபெயர்த்துள்ளார். 'திருவாசத்திற்கு உருகாதார் ஒருவாச்கத்திற்கும் உருகார்' என்று பேசுவர். பிறவிகள் பல உண்டென்றும் அவை இறைவனைப் போற்றி வணங்குவதால்தான் அறுபடும் என்பது இவரது ஆழ்ந்த பக்திக் கொள்கை. இறைவனின் அருள்கிடைக்க,

"புல்லாகிப் பூடாயப் புழுவாய் மரமாகிப்
புல்விருக மாகிப் பறவையாய்ப் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
சேல்லா நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்"

(திருவாசகம் - சிவபுராணம்) என்று பாடுகிறார் மாணிக்கவாசகர். திருமூலரின் திருமந்திரம் பத்தாம் திருமுறையில் இவர் உயிர்களிடத்துச் செய்யும் அன்பு இறைவனுக்குச் செய்யும் தொண்டு என்பது இவர் கருத்து. காரைக்காலம்மையார் இறைவனிடம் தன்னையே ஒப்படைத்துக் கொண்டவர். பெரியபுராணம் பக்திக் கொள்கையில் பல வியப்பூட்டும் செய்திகளைத் தருகின்றது. மனைவியைச் சிவனடியார்க்கு அளித்தல், மகனை அறுத்துக் கறி சமைத்தல் போன்ற பல கதைகள் இடம் பெற்றுள்ளன.

முடிபுகள் :

சங்க கால இலக்கியங்களில் இறைப் பக்தி பலவாறாகச் சொல்லப்பட்டடுள்ளன. வேலன் வெறியாட்டு நிகழ்ந்துள்ளது. முருகன் வீரத்திற்குரிய தலைவனானான். வைதீக சமயம், சமண பௌத்த சமயம், ஆசீவக சமயம் ஆகியவற்றின் கொள்கைகள் பரவின. இம்மை மறுமை, வினைகள் பற்றிய செய்திகள் சொல்லப்பட்டுள்ளன. பக்திப் பாடல்கள் அனைத்திற்கும் இறை நம்பிக்கையே. பக்தி இலக்கியத்கென்றுள்ள சிறப்புக்கள், பாடிய பக்தர்களைப் பொருத்தாக அமைகின்றன.



Scanned by CamScanner